DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 672/2022

Prosecution Witness 4

| | | | |
|---|---|---|---|
| Name | : மாரிமுத்து | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.குமாரசாமி | Calling | : |
| Village | : கிணத்துக்கடவு | Religion | : |
| Taluk | : | Age | : 58 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of July 2025.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 -ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)

முதல் விசாரணை :

1. நான் தற்போது கிணத்துக்கடவு பகுதியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். கடந்த 22.01.2022 அன்று மதியம் சுமார் 2 மணியளவில் கிணத்துக்கடவில் இருந்து வடசித்தூர் செல்லும் வழியில் எனக்கு முன்பாக ஆனந்த்குமார் என்பவர் தன்னுடைய இருசக்கர வாகனத்தில் ஹெல்மெட் அணிந்துகொண்டு சென்றுகொண்டிருந்தார். அவரை பின் தொடாந்து நானும் எனது இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தேன். லட்சுமிநகர், ராமராஜ் மில் அருகே சென்றுகொண்டிருந்போது எதிரே வந்து மாருதி ஸ்விப்ட் கார் வெள்ளை நிறம் TN 41 AR 1161 என்ற வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது.

2. மேற்படி வாகனம் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்தது. அஜாக்கிரதையாகவும் அதிவேகமாகவும் வந்தது. ஆனந்த்குமார் கீழே விழுந்துவிட்டார். நான் சென்று பார்த்தபோது அவருடைய தலை, மூக்கு மற்றும் காது ஆகிய பகுதிகளில் இருந்து இரத்தம் வழிந்தது. ஆம்புலன்ஸ் வாகனம் வரவழைக்கப்பட்டு கோவை, அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். காயம்பட்ட நபரின் தந்தைக்கு தகவல் கொடுக்கப்பட்டது. வாகனத்தை ஓட்டிய நபரை நான் பார்த்தேன்.

தற்போது அவரை பார்த்தால் அடையாளம் காட்ட இயலும். காவல் நிலையத்தில் அவர் பெயர் ஹரிகிருஷ்ணன் என்று தெரிவித்தார்கள். அதன் பிறகு நானும் காயம்பட்ட நபரின் தந்தையும் மருத்துவமனை சென்றபோது வரும் வழியிலேயே காயம்பட்ட நபர் இறந்துவிட்டார் என்று தெரிவித்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

3. போலீசார் என்னை எங்கு, எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் 22.01.2022 அன்று மாலை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். போலீசார் விசாரணையின்போது நான் 100 அடி தூரத்தில் இருந்து சம்பவத்தை பார்த்தேன் என்று கூறவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தின்போது எந்த பதிவு எண் கொண்ட வாகனத்தில் பயணம் சென்றேன் என்ற விபரத்தை புகார் மற்றும் முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் என்னுடைய உறவினர் என்றால் மாமாவின் மகன் ஆவார்.

4. ஆம்புலன்ஸ் வாகனத்தில் காயம்பட்ட நபருடன் யார் பயணம் செய்தார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, ஆம்புலன்ஸ் ஓட்டுநர், ஹெல்பர் ஆகியோர் இருந்தார்கள். காயம்பட்ட நபரை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சிகிக்சைக்கு அனுப்பவில்லை என்றும் அது வழக்கிற்காக நானாக கூறும் சங்கதி என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த பிறகு எதிரிதான் காயம்பட்ட நபரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார் என்றும் வேண்டுமென்றே வழக்கிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. போலீசார் விசாரணையின் மற்றும் முதல் விசாரணையில் விபத்து வாகனத்தின் எந்த பக்கவாட்டில் நடந்தது என்றும் சாலையில் எந்த பக்கவாட்டில் நடந்தது என்பது பற்றியும் நான் கூறவில்லை என்றால் வழககிற்கு தேவையான விஷயங்களை நான் கூறியுள்ளேன். உண்மையாகவே நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் காயம்பட்ட நபரின் உறவினர் என்ற முறையில் அவருடன் ஆம்புலன்ஸ் வாகனத்தில் சென்றிருப்பேன் என்றும் அவ்வாறு செல்லாததால் நான் சம்பவ இடத்தில்

இருந்தேன் என்பது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல, காயம்பட்ட நபரின் தந்தைக்கு தகவல் கொடுப்பதற்காக நான் அங்கு இருந்தேன்.

6. நான் உண்மையாகவே சம்பவ இடத்தில் இருந்திருந்தால் எதிரி காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்ற சங்கதி எனக்கு தெரிந்திருக்கும் என்றும் அவ்வாறு இல்லாததால் நான் சம்பவ இடத்தில் இருந்தேன் என்பது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.